மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அந்த பொன்னேரி கிராமத்திற்கு என்று கேட்கவில்லை. பாலப்பள்ளம் பேரூராட்சி அதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குரிய ஆய்வுக் கட்டணத்தைக் கட்டினால் இந்தக் குடிநீர்த் திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம்.

Cattle nuisance in Madras City.

* 500 *Q.*—THIRU K. M. SUBRAMANIAM: Will the Hon. Minister for Local Administration be pleased to state the steps taken to prevent the cattle nuisance in the City of Madras ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:

ஓர் விரிவான அறிக்கை @ இந்த அவையின் முன் வைக்கப்பெற்றுள்ளது.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, we are concerned more about the stray cattle that are going about in the City and a lot of accidents are happening on account of that also are the Government aware that there are two lorries owned by the Corporation for this purpose and those lorries are not doing any work. So, will the Government seriously think of stopping the stray cattle going about in the city and that is causing considerable inconvenience to the school-going children and motor transport vehicles, etc. ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அதற்கான ஒரு திட்டத்தைத் தீட்டி, நம்முடைய மாநகராட்சியும், காவல்துறையும் சேர்ந்து இந்தக் கஷ்டத்தைப் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். தற்போது பால் பண்ணை மூலமாக ஒரு பொது இடத்தை அமைத்து, அங்கே மாடுகளைக் கட்டி, வைத்து, அதற்கு நிர்வாகச் செலவாக மாதந்தோறும் ஒரு சிறு தொகை வசூலிக்கலாம் என்ற ஒரு யோசனை இருக்கிறது.

அறிக்கையில் சொல்லியிருப்பதுபோல, மாநகராட்சி காவல்துறைக்கு 4 இழுவைகளையும் (டிராக்டர்களையும்) கொடுத்திருக்கிறது. மேலும், தேவைப்பட்டால் கொடுக்க முடிவு செய்திருக்கிறது. சட்டப்படி மாநகராட்சி இதற்கான நடவடிக்கை எடுக்க வழியில்லை. ஆனால், 1888-ம் ஆண்டு நகர காவல் சட்டத்தின்படி போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் முடிந்த வரையில், அவர்களிடம் இருக்கின்ற மாடுகளைக் கட்டிவைக்கின்ற இடவசதியைப் பொறுத்து, மாடுகளைப் பிடித்து வைத்து, அதற்கான கட்டணமும் வசூல் செய்கிறார்கள். இந்தத் தண்டனை தான் இப்போது இருக்கிறது. அதிகத் தண்டனை அளிப்பது பற்றி ஆராயப்பட்டு வருகிறது.

@ 215ம் பக்கத்தில் இணைப்பு *II* ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. த. சோணையா : தலைவரவர்களே, சில நகரங்களில் பொலி காளை மாதிரி சில மாடுகள் யாரும் கேட்பாரற்றுத் திரிகின்றன. அது எங்கு வேண்டுமானாலும் போகும். அது யாருக்கும் சொந்தமில்லை. அப்படித் திரிகின்ற மாடுகளைப் பிடித்து ஏலம் போடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அது கோயில் மாடாக இருக்கும். அதுபற்றி என்ன நடவடிக்கை எடுப்பது என்பதற்கான தகவல் இல்லை.

கண்ணம்பாளையம்—கலங்கல் சாலை.

*501 வினா.—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு உள்ளாட்சித் துறைஅமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்ட கண்ணம்பாளையம்—கலங்கல் சாலைப்பணி இன்னும் பூர்த்தியாகாமல் இருக்கிறது என்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) பொதுமக்களிடம் இருந்து விண்ணப்பம் வந்ததா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) சூலூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கண்ணம்பாளையம்—கலங்கல் சாலை, கிராமப்புற வேலை வாய்ப்பு விரைவுத் திட்டத்தின் கீழ்தான் போடப்பட்டதேயொழிய வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் அல்ல. இச் சாலைப்பணி இப்பொழுது பூர்த்தி செய்யப்பட்டு விட்டது.

(இ) இல்லை.

House-sites for Harijans in Tiruttani taluk.

* 502 *Q.*—THIRU A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide house-sites for Harijans in N. N. Kandigai Colony, Tiruttani taluk.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : ஆம். எற்கெனவே, 9-2-1975-ந் தேதி அன்று, 45 வீடு மனையற்ற அரிசனங்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுவிட்டன.